## சுருக்கம்

பழங்குடியினர் மேம்பாடு – விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – ஆனைக்கட்டி, கூடலூர் மற்றும் ஜமுனாமரத்தூர் ஆகிய 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கு கூடுதல் தொகையாக ரூ. 3,84,62,000/–ற்கு திருத்திய நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் [ப.மே1(2)] துறை

அரசாணை (நிலை) எண்.44

நாள். 16.03.2020
திருவள்ளுவர் ஆண்டு 2051
விகாரி, பங்குனி மாதம் 03–ஆம் நாள்
படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண். 89, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 19.06.2015
2. பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். ப.மே/அ3/957/2012, நாள் 05.11.2019.

*******

**ஆணை :-**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், பழங்குடியினத்தவர்களின் கல்வி மற்றும் பொருளாதார நிலையினை உயர்த்திட விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆனைக்கட்டி, கருமந்துறை, கூடலூர், கொல்லிமலை மற்றும் ஜமுனாமரத்தூர் ஆகிய 5 இடங்களில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை துவங்கிடவும் மற்றும் 5 அரசு தொழிற்பயிற்சி நிலைய கட்டிடங்களை பொதுப்பணித்துறையின் மூலம் கட்டுவதற்கு ரூ.13,09,80,000/– மற்றும் 5 அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணாக்கர் விடுதிகள் கட்டிடங்களை தாட்கோ மூலம் கட்டுவதற்கு ரூ. 5,00,00,000/– ஆக மொத்தம் மூலதனத் தலைப்பில் மொத்தம் ரூ.18,09,80,000/-ஒதுக்கீடு செய்து அரசால் ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், பழங்குடியின நல இயக்குநர் ஆனைக்கட்டி, கருமந்துறை, கூடலூர், கொல்லிமலை மற்றும் ஜமுனாமரத்தூர் ஆகிய 5 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும் மலைப்பகுதிகளில் அமைக்கப்படுவதால் அரசாணையின்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 1309.80 இலட்சமானது தொழிற்பயிற்சி நிலையங்களின் கட்டடப்பணிகளுக்கு போதுமானதாக இல்லை எனவும், கட்டுமான பணிக்கென கூடுதல் செலவினம் கோரப்படும் 5 புதிய தொழிற்பயிற்சி நிலையங்களில் ஆனைக்கட்டி, கூடலூர் மற்றும் ஜமுனாமரத்தூர் ஆகிய 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு மட்டும் பொதுப்பணித்துறை மூலம் Tender Award Committee–யின் ஒப்புதலுடன் கூடிய திட்ட மதிப்பீடுகளுடன் கருத்துரு அனுப்பப்பட்டது என்றும், தற்போது கொல்லிமலை மற்றும் கருமந்துறை ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களின் திட்ட மதிப்பீடுகளை Tender Award Committee–ல் வைத்து அளிக்க கோரப்பட்டதற்கு சென்னை மண்டல முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) கடிதத்தில் கருமந்துறை அரசு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் கூடுதல் வசதிகள் கோரியதன் அடிப்படையில், சுற்றுச் சுவர்,கான்கீரிட், நவீன கழிப்பறை வசதி, தார்ச்சாலை அமைத்தல்

(த.பி.பா)

பணிகளுக்கு திட்ட மதிப்பீடு கோரியுள்ளதால், மேற்படி பணிகள் கூடுதல் வசதி தொடர்பானது எனவும், நிர்வாக ஒப்புதல் போதுமானது என்றும், திருத்திய நிர்வாக ஒப்புதல் தேவையில்லை என வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, Tender Award Committee ஒப்புதல் பெற்ற நான்கு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து உரிய ஆணையினை பெற்று வழங்க பழங்குடியினர் நல இயக்குநர் கோரியுள்ளார்.

| S.No | Name of the ITI | Nature of Work | Amount Required (Amount in lakh)<br>2019-2020 | Remarks |
|---|---|---|---|---|
| 1 | Anaicutti | 1. Construction of ITI main building (1st Floor)<br>2. Providing solar reflective this over the roof slab of main building and workshops.<br>3. Providing retaining wall<br>4. Approach road from main road. | 149.67 | TAC approved amount |
| 2 | Gudalur | 1. Construction of ITI main building (1st Floor)<br>2. Providing retaining wall<br>3. Approach road from main road. | 167.35 | |
| 3 | Jamunamarathur | 1. Due to Plinth area increase as per NCVT norms.<br>2. Due to hilly terrain 40% increase in labour.<br>3. Due to increase in cost of proving power wiring, transformers, Generator, Internal & External electrification. | 67.40 | TAC approved amount |
| 4 | Karumandurai | 1. Construction of Boys and Girls toilet with one sintex tank of 1000 liters capacity.<br>2. Providing Tar Road over WBM road with Drainage / | 75.35 | Now work to additional funds TAC approval not required |
| | | 1. Retaining Wall in East side and North Side – Rs.122.10 lakh.<br>2. South side compound wall Rs.28.17 lakh . | 150.27 | |
| | | **Total** | **610.24** | |

ரூ.6,10,24,000/– (ரூபாய் ஆறு கோடியே பத்து இலட்சத்து இருபத்தி நான்காயிரம் மட்டும்)

மேலும் கொல்லிமலை, அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு Tender Award Committee–யின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் நிதி ஒதுக்கீடு பெற தனியாக கருத்துரு அனுப்பப்படும் என்றும், கொல்லிமலை திட்ட மதிப்பீடு பெறுவதற்கு காலதாமதம் ஏற்படுவதால் மற்ற அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பணிகள் பாதிக்கப்படுகின்றன என்றும், பயிற்சியாளர்களின் நலனை கருத்தில் கொண்டும், பெற்ற அங்கீகாரத்தினை தக்க வைத்துக் கொள்ள தொழிற்பயிற்சி நிலையத்திற்கான நெறிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்பதாலும், ஆனைக்கட்டி, கூடலூர், ஜமுனாமரத்தூர் மற்றும் கருமந்துறை ஆகிய நான்கு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் தேவைப்படும் பணிகளை மேற்கொள்ள இந்த நிதியாண்டில் ரூ.610.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்குமாறும், மேற்படி தொகையினை அரசு பொது நிதியிலிருந்து கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வழங்குமாறும் பழங்குடியினர் நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. அதன் அடிப்படையில், ஆனைக்கட்டி, கூடலூர், ஜமுனாமரத்தூர் ஆகிய 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கான திருத்திய நிருவாக ஒப்புதல் அளித்திட கூடுதலான செலவினத் தொகை ரூ.3,84,62,000/– (ரூபாய் மூன்று கோடியே எண்பத்தி நான்கு இலட்சத்து அறுபத்தி இரண்டாயிரம் மட்டும்) கீழ்க்கண்டவாறு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

| வ.எண் | IIT தொழிற்பயிற்சி நிலையங்கள் | கூடுதல் ஒதுக்கீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ஆனைக்கட்டி | 1,49,87,000 |
| 2. | கூடலூர் | 1,67,35,000 |
| 3. | ஜமுனாமரத்தூர் | 67,40,000 |
| | மொத்தம் | 3,84,62,000 |

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**“4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 02 பழங்குடியினர் நலன் – 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – மாநிலச் செலவினங்கள் – JA விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 416 பெரும்பணிகள் – 01 பெரும்பணிகள்”**

**IFHRMS (த.தொ.கு. 4225 02 796 JA 41601)**

**OLD (த.தொ.கு. 4225 02 796 JA 1602)”**

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பெற்று பொதுப்பணித்துறைக்கு வழங்க பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

6. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியின நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 9940/நிதி[ஆதி(ம)பந]/ 2020, நாள் 11.03.2020-இல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை –600 005.
ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை – 600 0032.
மாவட்ட ஆட்சியர்கள், கோயம்புத்தூர்,
நீலகிரி, திருவண்ணாமலை.
திட்ட அலுவலர் (பழங்குடியினர் நலம்), திருவண்ணாமலை
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், கோயம்புத்தூர், நீலகிரி.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 600 009/18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை – 600 008.

<u>நகல்</u>
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர்
அவர்களின் தனிச் செயலர், சென்னை–600 009
நிதி (ஆதி(ம) ப.ந.) துறை, சென்னை–600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந5/கமபா)துறை, சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு–1)துறை, சென்னை – 600 009. (2 நகல்கள்)
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

16.3.2020

அரசு சார்புச் செயலாளர்
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.

16/3/2020